**நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்திட்டம் (பகுதி 07 மற்றும் பகுதி 08) - 2016**

நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்திட்டத்தின் (பகுதி 07 மற்றும் 08) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2011 யூன் 20 ஆந் திகதிய 2733 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 2734 - எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(அ) மற்றும் 4.03(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் பகுதி 06 வரையான பகுதிகளினதும் 09 மற்றும் 10 வரையான பகுதிகளினதும் அமுலாக்கல் முகவராக காணப்படுகின்ற அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதிகள் 07 மற்றும் பகுதி 08 இனை அமுல்படுத்தும் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 07 மற்றும் 08 இன் கீழ் இலங்கை நிலைபேறான அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீது எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றது. நம்பகரமான, போதியளவான மற்றும் வசதியான மின்வலு வழங்கலின் இடப்பரப்பை விஸ்தரித்தல் மற்றும் (அ) கிழக்கு, வட மத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மின்பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்துதல் (ஆ) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பின்தங்கிய கிராமங்களிற்கு மின்சாரம் வழங்குதல் (இ) எரிசக்தி வினைத்திறன் முன்னேற்றம்

மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை மேலும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக சேவை வழங்கலின் வினைத்திறனையும் நம்பகத்தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 18,135 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொலர் 162.03 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் 1.19 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 216.16 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொலர் 1.93 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு இலங்கை நிலைபேறான எரிசக்தி அமைச்சிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2011 நவம்பர் 17 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டதுடன் கடன் முடிவடையும் திகதி 2016 ஒக்தோபர் 30 என நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரை தொடர்ச்சியாக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதியை மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாய பூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(எ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து ஏற்படுகின்ற செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதியை மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாய பூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(உ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான முகாமைத்துவப் பொறுப்பிற்கான கூற்றானது செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) குளிர்சாதனப் பெட்டியை பயன்படுத்துவது தொடர்பான சூழல் விளைவுகளினை பரீட்சிப்பதற்காக ரூபா 42.17 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக, நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியால் பராமரிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்குகளிலிருந்த ரூபா 2.55 மில்லியன் மீதி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2016 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் நிதியளிப்பிற்கு இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 1.93 | 216.16 | 75.00 | 0.12 | 17.82 | 0.38 | 56.48 |
| ஜீஓஎஸ்எல் | 0.09 | 10.01 | 1.00 | - | 0.02 | 0.05 | 7.48 |
| மொத்தம் | **2.02** | **226.17** | **76.00** | **0.12** | **17.84** | **0.43** | **63.96** |

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 216.16 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.93 மில்லியன் ஒதுக்கீட்டில் 19.68 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 56.48 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 0.38 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட இறுதிக்காலத்தின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. நுண்-ஹைட்ரோ செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்ய ஊக்குவிப்பதற்கு நடுகை கம்பனிகளுக்கு உபகடன்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 144.48 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.29 மில்லியன் ஒதுக்கீடானது செயற்திட்டத்தால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் குறைப்பயன்பாட்டிலிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்ட நிரவாக கையேட்டின் பிரகாரம், எரிசக்தி வினைத்திறன் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் அபிவிருத்தி மீதான முன்னேற்றங்கள் செயற்திட்டத்தின் பகுதி - 07 மற்றும் பகுதி - 08 இன் பிரதான எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளாகவிருந்தது. ஆகையால், தோட்டத்துறைகளிற்கான நுண்-ஹைட்ரோ புனரமைப்பு மற்றும் கிறிட் இணைப்புக்களின் நிதியிடல் நோக்கங்களுக்கெதிராக விரிவான தொழில்நுட்ப கற்கைகள் மேற்கொள்வதையும் தகுதியுள்ள நிபந்தனைகளை அபிவிருத்தி செய்வதையும் மேற்கொள்வதற்காக ஆலோசனை உதவிகள் போன்ற நடவடிக்கைகள் செயற்திட்டத்தால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், பொறியியல் மீதான மதிப்பீடுகள், சூழல் மற்றும் சமூக கண்காணிப்பு சர்ச்சைகள், நெற் மீற்றரிங் அடிப்படை மீதான 1.3 மெகாவாற் கிறிட் இணைக்கப்பட்ட இயலுமை மீது 19 நுண் - கைற்றோ

செயற்திட்டங்களுக்காக ரூபா 144.48 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 1.29 மில்லியன் கடன் இணைப்பை ஸ்தாபித்தல் மற்றும் வெளிச்சப் பயன்பாட்டை பரிசோதிக்கும் ஆய்வுகூட உபகரணத்தை கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 06 நுண் - ஹைட்ரோ செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான கடன் இணைப்பின் கீழ் உப கடன்களை வழங்குவதற்கான நிதிசார் நிறுவனமாக செயற்திட்டத்தால் விஷேடமாக உத்தரவாதமளிக்கப்பட்ட வங்கியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், நுண் - ஹைட்ரோ செயற்திட்டமொன்று மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடுகை கம்பனியால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. நுண் - ஹைட்ரோ மின்வலு உற்பத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நடுகை கம்பனியால் அதற்காக எதிர்கொள்ளப்பட்ட உலக தேயிலைச் சந்தைப்படுத்தலிலுள்ள குறைபாடுகள் மற்றும் நிதிசார் மட்டுப்படுத்தல்கள் போன்றவற்றால் போதிய கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.3 முறைமைகள் மற்றும் கட்டுரைகள்

நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வானது நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.